கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 117/2009

தேதி : 11.11.2022

(பி.வா.சா.–1) – திலகம்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் மேலும் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

அசல் வழக்கு எண்.1/2007 வழக்கின் பிராது நகலை பி.வா.சா.ஆ.–1 ஆக தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை ஆகியவற்றின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.–22. தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.–23. மேற்படி அசல் வழக்கு எண்.1/2007 வழக்கில் நான் 9–ம் பிரதிவாதி என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.–2 ஆக முருகவேல் செட்டியார் எழுதிய உயிலின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன். அந்த உயிலை நான் தான் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த உயிலில் யார் யார் சாட்சிகள் என்று தெரியும். M.K.முத்து, சதாசிவம் மகன் தர்மராஜ் மற்றும் திருமலைசாமி ஆகியோர் அதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். உயிலில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் முருகவேல் செட்டியாரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்று நான் சொல்கிறேன். அந்த உயிலில் 1–ம் வாதியின் கணவர் ராஜேந்திரன் சம்பாதித்த சொத்துக்களும் உள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.1/2007 வழக்கின் தீர்ப்புரையில் எல்லா சொத்துக்களும் பொதுவான சொத்துக்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.–2 உயிலில் 1–ம் வாதியின் கணவர் ராஜேந்திரனின் சொத்துக்களும் உள்ளது என்பதால் அந்த உயில் 1–ம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.1/2007 வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களை விட இந்த வழக்கில் அதிகமான சொத்துக்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.–2 உயிலை முருகவேல் செட்டியார் எழுதி பதிவு செய்யவில்லை என்றும் அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது நாங்கள் அந்த உயிலை தயார் செய்து அவரது கையெழுத்து பெற்றுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. அவர் திடகாத்திரமாகத்தான் இருந்தார். அவர் நல்ல நிலையில் இருந்திருந்தால் கண்டிப்பாக அவரது மகன் ராஜேந்திரனுக்கும் உயிலில் சொத்தை பாத்தியப்படுத்திக் கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.1/2007 வழக்கில் சொத்துக்கள் பொதுவான சொத்துக்கள் என்பதால் தான் வாதிகள் இருவருக்கும் சொத்துக்களில் பாகம் பிரித்து கொடுக்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.1/2007 வழக்கில் உள்ள சொத்துக்களின் அனைத்து ஆவணங்களும் நான் தான் வைத்துள்ளேன் என்றால் சரிதான். அவற்றை மேற்படி வழக்கில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி அசல் வழக்கு எண்.1/2007 வழக்கில் தாக்கல் செய்த என்னுடைய எதிர்வழக்குரையில் என்னிடம்

எந்த ஆவணங்களும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.–5 முதல் பி.வா.சா.ஆ–18 வரை தாக்கல் செய்துள்ள தீர்வை ரசீதுகளில் முருகவேல் செட்டியார் பெயரில் செலுத்தப்பட்டுள்ள ரசீதுகளும் என்னுடைய கணவர் மனோகரன் பெயரில் செலுத்தப்பட்டுள்ள ரசீதுகளும் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். 1–ம் வாதியின் கணவர் ராஜேந்திரன் பெயரில் செலுத்தப்பட்டுள்ள தீர்வை ரசீதுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யாமல் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. 1–ம் வாதியின் கணவர் ராஜேந்திரன் பெயரில் செலுத்தப்பட்டுள்ள தீர்வை ரசீதுகள் வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.–10, 15 மற்றும் 16 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அவை பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொருவர் பெயரிலும் பிரிக்கப்படாத பாக சொத்துக்கள் தனித்தனியாக உள்ளதால் தான் தனித்தனியாக தீர்வை ரசீதுகள் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–19 ஆவணத்தில் முருகவேல் செட்டியார், மனோகரன் , ராஜேந்திரன், சரஸ்வதி, வெள்ளைத்தாய், சூடாமணி மற்றும் செல்வம் ஆகியோர் கையெழுத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். அவர்கள் கையெழுத்து போட்டு தான் அந்த கடனை வாங்கியுள்ளார்கள். அதனால் தாவா சொத்துக்கள் கூட்டு குடும்பச் சொத்துக்கள் தான் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–19 படி பெற்ற அடமானக் கடனுக்கு முருகவேல் செட்டியாருக்கு வந்த அறிவிப்பு மட்டும் பி.வா.சா.ஆ–24 ஆக தாக்கல் செய்துள்ளோம் என்றும் மற்ற நபர்களுக்கு வந்த அறிவிப்புகளை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் அது பற்றி ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ–37 முதல் பி.வா.சா.ஆ–61 வரை மற்றும் பி.வா.சா.ஆ–66 முதல் பி.வா.சா.ஆ–69 வரை உள்ள தீர்வை ரசீதுகள் முருகவேல் செட்டியார், சூடாமணியம்மாள், மனோகரன், வெள்ளைத்தாய்யம்மாள், செல்லத்தாய் என்கிற செல்லம்மாள், சரஸ்வதியம்மாள் மற்றும் என்னுடைய பெயர் ஆகிய பெயர்களில் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–70 பதிவு செய்யப்படாத உயில் என்றால் சரிதான். அதில் ஒரு நபர் மட்டும் தான் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த உயிலை அசல் வழக்கு எண்.1/2007 வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கில் இந்த உயில் செல்லாது என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ராஜேந்திரன் பெயரில் சொத்துக்கள் கிரையம் பெற்றதற்கான ஆவணம் வாதிகள் தரப்பில் வா.சா.ஆ–12 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ராஜேந்திரன் இறந்த பிறகு அவரது தாயார் ரத்தினம் அவரது பாகத்தைப் பொறுத்து 2–ம் வாதிக்கு வா.சா.ஆ–13 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அது செல்லாது. வா.சா.ஆ–17 பட்டா எல்லோருடைய பெயரிலும் உள்ள கூட்டுப் பட்டா என்றால் அவ்வாறு யாருக்கும் கூட்டுப் பட்டா கொடுக்கவில்லை. வா.சா.ஆ–20 பட்டா முருகவேல் செட்டியார், மனோகரன் மற்றும் ராஜேந்திரன் ஆகிய மூவர் பெயரில் உள்ளது என்றால் முருகவேல் செட்டியார் பெயரில் மட்டும் தான் வரவேண்டும் மற்ற இருவர் பெயரில் பட்டா வரவில்லை. வா.சா.ஆ–21 –ல் உள்ள சொத்தான புல எண்.211/18 சொத்தை 1–ம் வாதி தான் ஓட்டி வருகிறார் என்பதற்கு வா.சா.ஆ–21 ஆவணத்தை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. புல எண்.287 சொத்தை 1–ம் வாதி தான் ஓட்டி வருகிறார் என்பதற்கு வா.சா.ஆ–19 ஆவணத்தை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 2016–ம் ஆண்டு முதல் தாவா

சொத்துக்களை பாகம் பிரித்து தரக்கோரி வாதிகள் கேட்டுவந்தார்கள் என்றும் நாங்கள் அவ்வாறு பிரித்துக் கொடுக்காமல் காலம் கடத்தி வந்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகள் ஓட்டி வரும் நிலத்திற்கு நாங்கள் இடையூறு செய்வதாக 1—ம் வாதி எங்கள் மீது 19.11.2016 தேதி நெய்க்காரப்பட்டி, தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. என்னை துன்புறுத்துவதாக நான் தான் அவர்கள் மீது புகார் கொடுத்தேன். தாவா சொத்துக்களை பாகம் பிரிப்பது சம்பந்தமாக நான், எனது மாமியார் ரத்தினம், முருகவேல் செட்டியார் மகள் செல்லக்கன்னு மற்றும் 1—ம் வாதி சாந்தி ஆகியோர் 28.11.2007 தேதி ஒரு பஞ்சாயத்து உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டோமா என்றால் அவ்வாறு ஏற்படுத்திக் கொள்ளவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த உடன்படிக்கை ஆவணத்தின் ஜெராக்ஸ் நகல் என்றால் சரியல்ல. அதில் என்னுடைய கையெழுத்து உள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தின் அசல் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.1/2007 வழக்கிலும் இது போல் எந்த ஆவணமும் இல்லை என்று சொல்லிவிட்டு பின்னர் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதனை நீதிமன்றமும் தீர்ப்புரையில் சொல்லியுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அது போல் தான் மேற்படி உடன்படிக்கை ஆவணம் அசலும் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 17.11.2021 தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகு 12 ஆண்டுகள் கழித்து தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.1/2007 வழக்கிலும், இந்த வழக்கு நடவடிக்கைகளிலும் என்ன நடக்கிறது என்று தெரிந்து கொண்டு வாதிகளின் உரிமைகளை முறியடிக்கும் விதமாக தாமதமாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் தாவா சொத்துக்களில் A ஷெட்யூல் சொத்துக்கள் 15.2.1995 தேதிய பாகப்பிரிவினை அடிப்படையில் முருகவேல் செட்டியாருக்கு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த A ஷெட்யூல் சொத்துக்களில் இருந்து கிடைத்த வருமானத்திலிருந்து தான் B முதல் D வரை உள்ள ஷெட்யூலில் கண்ட சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.1/2007 வழக்கில் எனக்கு பாகம் பிரித்து கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றும் அதன் அடிப்படையில் பாகம் பிரித்து கொடுக்குமாறு மேற்படி வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. முருகவேல் செட்டியாரின் மகனான 1—ம் வாதியின் கணவர் ராஜேந்திரனின் பிறப்பு அடிப்படையிலும், வாரிசு அடிப்படையிலும் முருகவேல் செட்டியாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்களிலும், ராஜேந்திரன் சம்பாதித்த சொத்துக்களிலும் ராஜேந்திரனின் வாரிசுகளான வாதிகளுக்கு பாக உரிமை கோர உரிமை உள்ளது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் 10/48 பாக உரிமை உள்ளது என்றால் சரியல்ல. எனவே வாதிகளுக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல. நான் வாதிகளின் அனுபவத்திற்கு இடையூறு செய்ததால் தான் வாதிகள் என் மீது அசல் வழக்கு எண்.167/2021 (பழைய எண்.205/2016) வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின் தாவா சொத்துக்கள் அனைத்தும் ராஜேந்திரனுக்கு மட்டும் பாத்தியப்பட்டவை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின் சொத்துக்களை மேற்படி ராஜேந்திரனின் வாரிசுகள் என்ற முறையில் வாதிகள் தான்

அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ராஜேந்திரனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் தலையிடுவதற்கு எனக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனவே மேற்படி வழக்கின் தாவாப்படியும் வாதிகளுக்கு தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல. என்னுடைய மாமியார் ரத்தினம், எனது மகள் தேவி மற்றும் முருகவேல் செட்டியாரின் மகள் செல்லக்கன்னு ஆகிய அனைவரும் கூட்டு சதி செய்து முருகவேல் செட்டியாரின் அனைத்து சொத்துக்களையும் நாங்கள் மட்டுமே அனுபவிக்க வழக்குகளை வீணாக அலைகழித்து யாருக்கும் பாகம் பிரித்து கொடுக்காமல் வீண்காலதாமதம் செய்ததால் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

JJEYASUTHAHAR Digitally signed by JJEYASUTHAHAR Date: 2022.11.11 18:38:43 +0530

கூடுதல் சார்பு நீதிமன்றம்,
பழனி.